இருக்கின்றன. அந்த ஊரைச் சார்ந்து இருக்கிற காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இல்லை. அதுபோன்ற இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இருந்து அந்தக் கிராமங்களுக்குக் குழாய் மூலம் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சில கிராமங்களில் இதுபோன்ற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உண்டு, அதோடு இணைந்திருக்கிற காலனிக்கு இதுபோன்ற குழாய் இணைப்புக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. கோடை வேறு வந்துவிட்டது. இதைக் கருத்தில் கொண்டு இதுபோன்ற இடங்களில் ஒ.எஸ்.டி.க்கள் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் எங்கு இருக்கிறதோ அங்கிருந்து சம்பந்தப்பட்ட அதோடு இணைந்திருக்கிற காலனிகளுக்குக் குழாய் இணைப்புக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. எம்.செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் எந்த எந்தப் பகுதிகளில் இந்த மாதிரி பிரச்சினைகள் இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள் என்று சொன்னால் உடனடியாக குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக இந்தப் பணிகள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *459*, டாக்டர் க. கோபால், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**459—**

**தாட்கோ பயனாளிகளுக்கு வங்கிக் கடன்**

**24164*—டாக்டர் க. கோபால்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாட்கோ மூலம் பயன்பெறும் பயனாளிகளுக்கு தாட்கோ மூலம் பெறும் மானியத் தொகையைத் தவிர, வங்கிகளில் இருந்து அவர்களுக்கு தொகை கிடைப்பதில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*[1995 ஏப்ரல் 26*

*(அ) மற்றும் (ஆ) :* தாட்கோ பயனாளிகட்கு மான்யம் மற்றும் விளிம்புத் தொகை வழங்கப்பட்ட பிறகு, வங்கிகள் கடன் கொடுப்பதில் எவ்விதமான சிரமமும் இல்லை.

**டாக்டர் க. கோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிக் கிடைக்கின்ற அந்தப் பயனாளிகள் ஓரளவுக்கு வசதியாகவும், அசையும், அசையா சொத்துக்கள் இருக்கின்றவர்களுக்கு தான் அந்தக் கடன்கள் கிடைக்கின்றதே ஒழிய அந்த வறுமைக் கோட்டுக்குக்கீழே இருக்கிற அந்த ஆதி திராவிட மக்கள் தொழில் தொடங்குவதற்கு அவர்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்கு அந்த விளிம்புத் தொகை கிடைத்தாலும் கூட தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் பெறுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஏன் என்று சொன்னால், அந்த தாட்கோ மூலம் கிடைக்கின்ற அந்த பயனாளிகள் அந்த லோன்களைக் கட்டுவது இல்லை என்ற ஒரு குறையை அங்கே சொல்லுகிறார்கள். எனவே, அனைத்து வங்கிகளுக்கும் அந்த விளிம்புத் தொகை கிடைத்தவுடனே அந்தக் கடன்களைப் பெறுவதற்கு சட்டப்பூர்வமாக அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஒருசில புகார்கள் அரசுக்கு வந்து அது சம்பந்தமாக அந்த மாவட்ட மேலாளர்கள் மூலமாக தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கையை ஏற்று அந்த அந்த வங்கி மேனேஜர்களுக்கு துறை கடிதம் மூலமாக அறிவுறுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய இந்தப் பொற்கால ஆட்சியில் ஆதி திராவிட மக்களுக்கு அளிக்கப்படுகின்ற அந்த அதிகமான சலுகைகளின் காரணமாக இந்த தாழ்த்தப்பட்ட மக்களுடைய குழந்தைகள் எல்லாம் இன்று பொறியியல் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும் பட்டங்களைப் பெற்று இன்று தொழில் தொடங்க முடியாமல் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிற வேளையில் அவர்களுக்கு சொத்து ஜாமீன் இல்லாமல் அவர்கள் பெற்று இருக்கிற அந்த சான்றிதழை மட்டும் வைத்துக் கொண்டு அரசு முழு கடன் வழங்க ஆணை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 26]

**மாண்புமிகு திரு.எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பரிசீலித்த காரணத்தால்தான் இது போன்ற தனி நபர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்காக மானியத் தொகை 15 ஆயிரத்திலிருந்து 25 ஆயிரமாகவும்; விளிம்புத் தொகை 85 ஆயிரத்திலிருந்து 1 ¼லட்சமாகவும், உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதற்கு இணங்க (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு போதுமான அளவுக்கு மனுக்கள் வந்துகொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 460, திரு. எச். எம். ராஜு, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**460—**

**கம்பளி ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஏற்படுத்துதல்**

*38823—**திரு எச். எம். ராஜு:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் கம்பளி ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டத்தின் கம்பளி ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

முற்பகல் 11-15

**திரு. எச். எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் ஒரு குளிர் பிரதேசம் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். மலைப் பிரதேசம் என்பதாலும் அங்குள்ள மாவட்டத்து